THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்பதைப்பற்றி இப்போது பேச வேண்டிய அவசியமில்லை. தேர்தலுக்கும் இதற்கும் சமபந்தமில்லை. இவர்கள் எல்லாம் கோர்ட்டில் தண்டனை பெற்றவர்கள். அதை நம்முடைய இஷ்டத்திற்நத் தக்கவாறு மாற்ற முடியாது. மாற்றவேண்டும் என்று சர்க்கார் ஏதாவது சந்தர்ப்பங்களில் நினைத்தால் அவ்விதம் முடிவு செய்யும். இப்போது தண்டனை பெற்றிருப்பவர்களை எல்லாம் அரசியல் கைதிகள் என்று சொல்லிவிட முடியாது. அதை சர்க்காரும் ஏப்புக்கொள்ள முடியாது. ஆகவே இவர்களை விட்டுவிட வேண்டும் என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தப் போக்கையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாது.

SRI N. K. PALANISAMI: May I know whether the Government are aware of the volume of public support for the release of these political prisoners and the Communist Party of India has already planned to place the public views on release of political prisoners before Government? If so, why should not Government comply with those views?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Communist Party of India wants the release of their men who have been convicted for certain grave offences. But I cannot accept that the views of the Communist Party of India reflect the views of the public.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ: கனம் அங்கத்தினர் சொன்னார் வெள்ளையர் காலத்தில்கூட கனம் வினாயகம் போன்றவர்கள் இருக்கிற க்ட்சியில் செய்தார்கள் என்று. கடந்த காலத்தில் வெள்ளையர்கள் இருந்தபோது அங்கு இருந்த அதிகாரிகளை எதிர்த்துப் போராடியிருக்கலாம். ஆனால் சகோதரத் தோழர்களையே வெட்டிக் கொலை செய்த சம்பவங்களைக் காட்ட முடியுமா? இவர்களுக்கு ஆதரவு காட்டும் முறையில் விடுதலை செய்யத் தயாராக இருக்கிறதா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பழைய சரித்திரத்திற்கு இந்த கேள்வி நேரத்தில் போக வேண்டிய அவசியமில்லை.

Sri N. K. Palanisami rose.

DEPUTY SPEAKER: This matter was discussed already when the Jail Demand was discussed in this House. The Hon. Minister has replied suitably. There is, therefore, no need to put any more questions.

Sales-tax on paddy (removal)

* 1061 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நெல் மண்டி கமிஷன் வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் நெல்லுக்கு விற்பனை வரியை எடுத்துவிடும்படி கோரி 22—12—1960 தேதியிட்ட விண்ணப்பம் சர்க்காருக்கு வந்ததா ?

(இ) அதன்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination by the Government.

[24th March 1961

SRI V. SANKARAN: ஸார், இந்த விண்ணப்பம் செய்திருப்பவர்கள் மூட்டைக்கு 4½ அணு கமிஷன் அல்லது ப்ரோக்கரேஜ் வாங்கும் ஏஜெண்டுகள். அப்படியும் நெல்லிலிருந்து வரி மூலம் வரும் வருமானம் ஒரு சில லட்சம் தான் என்பதையும், முக்கிய உணவுப் பொருளாகிய நெல் லுக்கு இதை எடுத்து விட்டால் ஒரு நல்ல gesture ஆக இருக்கும் என்ற முறையில் சீக்கிரத்தில் எடுத்துவிட முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினருக்கு சட்டம் நன்ருகத் தெரியும். இந்த விற்பனை வரி வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறதே தவிர இது கன்ஸ்யூமர் டாக்ஸ்தான். ஆகையால் இதை வியாபாரிகள் யாரிடத்தில் விற்கிருர்களோ அவர்களிடத்திலிருந்து வாங்கிக் கொடுக்க எந்தவிதக் கஷ்டமும் இருக்காது என்றுதான் நினைக் கிறேன்.

Employees in the Office of Electrical Engineer (General) Madras

* 1062 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மின்சார இன்ஜினியர் (பொது) அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்னை சம்பளக் கமிஷன் சிபார்சிற்கேற்பக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்தின் பாக்கி கொடுக்கப்பட்டிருக்கின்றதா ?

(ஆ) இல்லையெனில், அதன் காரணங்கள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) Arrears consequent on the fixation of pay in the revised scales sanctioned in July 1960 have been paid to all employees in the Office of the Electrical Engineer (General), Madras.

Certain posts such as Store-keepers, I and II Grades, and members of the provincialised work-charged establishment in the Electrical Engineer (General) Division have not been included in the pay fixation referred to above. The question of revision of scales for these categories was under the consideration of Government and orders have since been issued on 15—3—1961 laying down revised scales for these posts also.

Lower Bhavani and other areas (silting)

* 1063 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the proportion of area and volume silted up in the catchment area of (1) Lower Bhavani Project, (2) Amaravathi Project and (3) Mettur Reservoir; and

(*b*) the steps taken by the Government to remove this accumulating silt periodically?

THE HON. SRI P. KAKKAN: (*a*) There is no possibility of the catchment area of the Projects getting silted up.

(*b*) Does not arise.